DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.33/2024

PW - 9

| | | |
|---|---|---|
| Name | : | மணிகண்டன் (Lw - 8) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(எதிரி ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 17.04.2026**

நான் தற்போது கரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் எலும்பு முறிவு பிரிவில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 19.11.2023ந் தேதி இரவு 07.30 மணிக்கு நாமக்கல் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவராக பணியில் இருந்தேன்.

அப்போது கோபிநாத் என்பவர் சிகிச்சைக்காக வந்திருந்தார் கோபிநாத்தை விசாரித்த போது அவரை அன்றைய தினம் 19.11.2023ந் தேதி மாலை 06.30 மணியளவில் தனது வீட்டில் வைத்து தெரிந்த 2 நபர்கள் உருட்டுகட்டையால் தாக்கியதாக கூறினார்.

அவரை பரிசோதனை செய்த போது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு பின்வரும் காயங்கள் ஏற்பட்டிருந்தன. அவருக்கு 1. இடதுபக்க தலையில் 2x0.5x0.5cm அளவில் வெட்டு காயமும் 2. முன் நெற்றியில் 1x0.5x0.5cm அளவுள்ள வெட்டுகாயம் இருந்தது மூக்கில் இரத்த கசிவு இருந்தது. அவருக்கு முதலுதவி சிகிச்சை வழங்கப்பட்ட பின்னர் அன்றைய தினமே மேல் சிகிச்சைக்காக சேலம் நியூரோ பவுண்டேஷன் மருத்துவமனைக்கு சென்றுவிட்டார். ( நாமக்கல் அரசு மருத்துவமனை

விபத்து பதிவேடு அ.சா.ஆ.**8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)** இது குறித்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

காயம்பட்டதாக சொல்லப்படும் கோபிநாத் என்னிடம் சிகிச்சைக்கு வரும்போது மது அருந்தி இருந்ததாக எனது விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். கோபிநாத்தை எத்தனை நபர்கள் அடித்தாக சொன்னார் என்றால் 2 நபர்கள் அடித்ததாக கூறினார். போலிசார் எதிரி அடித்ததாக சொல்லப்படும் ஆயுதம் எதையும் காட்டி விசாரித்தார்களா என்றால் இல்லை. கோபிநாத்துக்கு நான் முதல் உதவி மட்டும்தான் செய்தேன் என்றாலும் ஸ்கேன், எக்ஸ்ரே ஆகியவை எடுக்கவில்லை என்றாலும் சரிதான். பொதுவாக ஒரு நபர் இருசக்கர வாகனத்தில் தாறுமாறாக குடிபோதையில் சென்று கீழே விழும்போது மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரியல்ல சிராய்ப்பு காயங்கள் தான் ஏற்படும்.

<u>மறுவிசாரணை</u>**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**